DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 149/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீதர்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சீனிவாசன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் தற்போது சங்கர் நகரில் உள்ள வேலுச்சாமி நகரில் வசித்து வருகிறேன். பிர்லா கம்பெனியில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளளேன். கடந்த 29.08.2024 ம் தேதி கிளம்பி 30.08.2024 ம் தேதி பாம்பேவில் உள்ள எனது மகள் வீட்டிற்கு சென்றிருந்தேன். 02.09.2024 ம் தேதி காலை எனது பக்கத்து வீட்டுக்கார் சந்திரசேகர் போன் மூலம் எனது வீட்டுக்கதவு திறந்திருப்பதாகவும் இருப்பதாகவும் சொன்னார் நான் மறுநாள் 03.09.2024 ம் தேதி வந்துவிட்டேன். வந்து பார்த்தபோது ஜாமான்கள் சிதறியும் கபோர்டு திறந்திருந்தது பொருட்கள் எதுவும் திருடுபோகவில்லை. நாங்கள் எந்த சாமாகன்களும் வைக்கவில்லை. பின்பு இது குறித்து போலிசில் புகார் கொடுத்தேன் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வீட்டை பார்த்தபோது யாரோ வீட்டின் முன்கதவை உடைத்து திருட முயற்ச்சி செய்யததை தெரிந்து கொண்டேன். முன் கதவு சேதம் அடைந்திருந்தது. பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

1,3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

உங்கள் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததாக சொல்லியுள்ள நிலையில் சிகிச்சை எடுத்திர்களா என்றால் மறுநாள் கிளம்பி வந்துவிட்டோம். புகாரில் 29.08.2024 ம் தேதி சிகிச்சை தொடர்ங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கிளம்பியதாக சொல்லியுள்ளேன். புகாரில் 02.09.2024 என்பது இடைச்சறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் அப்போதே எழுதப்பட்டது. சந்திரசேகர் எப்போது தகவ்ல சொன்னார் என்றால் காலை 06.30 மணிக்கு

2. உடுமலைக்கு மதியம் 02.00 மணிக்கு வந்திர்கள் என்றால் 03.09.2024 ம் தேதி 02.00 மணிக்கு வந்தேன்.வீட்டில் வந்து பார்த்தபோது அன்றைய தினம் காவல் நிலையத்திற்குகோ, 100 க்கோ தகவல்சொல்லவில்லை என்றால் ஆம். புகார் 15 நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அன்றைநய தினமே போலிசார் வந்து பார்த்துவிட்டு சென்றார்கள். 03 ம் தேதி போலிசார் புகார் கொடுக்க சொன்னார்களா என்றால் 02 ம் தேதியே போலிசார் வந்து பார்த்துவிட்டு சென்றார்கள் . தகவல் சொன்ன பின்பு புகார் கொடுக்க சொல்லவில்லை என்றால் ஆம். 15 நாளுக்கு பின்பு 18.09.2024 ம் தேதி போலிசார் புகார் கொடுக்க சொன்ன பின்பு புகார் கொடுத்திர்கள் என்றால்ஆம்.

3. புகாரில் என்ன எழுத வேண்டும் என்ற விவரம் சொன்னார்களா என்றால் நான் தான் எழுதினேன். சுரேஷ், நந்தகுமார், ராஜேந்திரன் உங்களுக்கு தெரிந்தவர்கள் என்றால் பக்கத்து வீட்டுக்காரர்கள். சந்திரசேர்கர் சுமார் 30 வருடமாக எனது பக்கத்து வீட்டில் உள்ளார்கள்., சுரேஷ் 3 வருடங்களாகவும் தெரியும். எதிரிகள் எந்த ஊர் என்று தெரிந்து கொண்டிர்களா என்றால் இல்லை. இந்த வழக்கு பற்றி போலிசாரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆம். நீங்கள் சொன்ன படி, சொன்ன தேதியில், எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் புகார் கொடுத்துள்ளிர்கள் எனறால் இல்லை. உங்கள் வீட்டு கதவு உடைக்கப்பட்டதாக தற்போது சொல்லியுள்ள நிலையில் அதனை புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

4. 4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 149/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜி | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் தற்போது சங்கர் நகர் பக்கத்தில் உள்ள வேலுச்சாமி நகரில் வசித்து வருகிறேன். டிரான்ஸ்"போர்ட்டில் அசிஸ்டன்ட் இன்ஞ்சினியராக இருந்து ஒய்வு பெற்றுவிட்டேன். 02.09.2024 ம் தேதி காலை யில் எனது எதிர் வீட்டில் உள்ள ஸ்ரீதர்குமார் வீட்டின் முன் கதவு திறக்கப்பட்டு உடைக்கப்பட்டிருந்ததை பார்த்தேன். அருகில் உள்ள தாமஸ் என்பவரிடம் ஸ்ரீதர் குமார் கேட்டு சாவி கொடுத்திருந்தார் அதை வாங்கியும், எனது மறறொரு பக்கத்துவீட்டுக்காரர் சுரேஷ் என்பவரை அழைத்துக்கொண்டு காம்பவுண்டு கேட்டை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது கதவு திறந்தும், பீரோவில் இருந்த துணிமணிகள் எடுத்து கலைத்து போட்டுள்ளார்கள். House Breaking நடந்துள்ளதாகவும், Theft ஆக உள்ளதாகவும் தெரிந்ததால் ஸ்ரீதர்குமாருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவர் அவரது வீட்டில் மதிப்புள்ள பொருட்கள் எதுவும் இல்லை உடனே புறப்பட்டு வருவதாக சொன்னார். காவல் நிலையத்தில் இருந்து வந்து விசாரித்தார்கள் மேற்படி விவரத்தை கூறினேன்.

1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. அ.சா.1 உங்களது நண்பர் என்றால் எதிர் வீட்டுக்காரர். அ.சா.1 எப்போது வீட்டை பூட்டி சென்றார் என்றால் 26ம் தேதி என்று நினைக்கிறேன். எந்த தேதி என்று உறுதியாக தெரியாது என்றால் 26.08.2024ம் தேதி. எந்த பொருளும் திருடு போகவில்லை என்று அ.சா.1 சொன்னார் என்றால் ஆம். தாமஸ் என்பவரிடம் சாவி வாங்கியபோது அவரை கூட்டி வந்து பார்க்கவில்லை என்றால் ஆம். தாமஸ் எதற்காக சாவி கேட்கிறிர்கள் என்று கேட்கவில்லை என்றால் ஆம். போலிசார் விசாரணையில் ஸ்ரீதர் குமார்க்கு சாவி வாங்கிக்கொண்டு வந்து தகவல் சொன்னதாகத்தான் சொல்லியுள்ளிர்கள் என்றால் ஆம். எத்தனை மணிக்கு சாவி வங்கி வந்து பார்த்திர்கள் என்றால் 6.00– 6.30 மணிக்கு. போலிசார் வந்து பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள் 10.00 மணிக்கு மேல் இருக்கும்.

2. போலிசார் புகார் தர சொல்லவில்லை என்றால் ஆம். நீங்கள் சொன்னபடி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ம், போலிசாரும் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. போலிசாரிடம் பீரோவில் இருந்து நகை காணாமல் போகவில்லை என்ற விவரத்தை சொல்லவில்லை என்றாலும், உடைக்கப்பட்ட விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. 4ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.149 /2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சிங்காரவேலன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

முதல் விசாரணை

நான் வேலுச்சாமி நகர் 2 வது வீதியில் வசித்து வருகிறேன். பிளம்பிங் வேலை செய்து வருகிறேன். 02.9.2024 ம் தேதி எனது வீட்டிற்கு எதிரில் ஸ்ரீதர் குமார் வீடு காலை 06.30 மணியளவில் திறந்திருப்பதாக சொன்னார்கள். உள்ளே சென்று நானும் சந்திரசேகரனும் சென்று பார்த்தபோது கதவு உடைக்ப்பட்டிருந்தது பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது. பொது நபர் இருவர் இருந்தார்கள் பெயர் தெரியவில்லை. உள்ளே பார்க்கும்போது பீரோ திறந்து துணிமணிகள் சிதறி கிடந்தன. போலிசாருக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்து பார்த்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. அ.சா.1 மற்றும் அ.சா.2 நண்பர்கள் என்றால் எதிர் வீடு 3 வருடங்களாக தெரியும். வீட்டின் கதவு உடைக்கப்பட்டதாக சந்திரசேகர் சொல்லிதான் தெரியும் என்றால் பொதுமக்கள் தகவல் சொல்லி பின்பு

சாவி வாங்கி சென்று பார்த்தேன். போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் பொதுமக்கள் சொல்லி தான் தெரியும் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். ஸ்ரீதர் எப்போது அவர் மகள் வீட்டிற்கு சென்றார் என்றால் 28,29 என்று நினைக்கிறேன். சாவி வாங்கி வந்தபோது தாமஸ் வரவில்லை என்றால் தாமஸ் என்ற பெயர் தெரியவில்லை. சந்திரசேகர் யாரிடமிருந்து சாவி வாங்கி வந்தார் என்றால் பக்கத்து வீட்டில் இருந்து பெயர் தெரியவில்லை. ஸ்ரீதர் வீட்டில் இருந்து எந்த பொருளும் நகையும் காணாமல் போகவில்லை என்றால் சரிதான். போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் 07.00–8.00 மணிக்குள். போலிசார் புகார் தர சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 உங்களுக்கு நண்பர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ஆம். நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் 07.00 – 8.00 மணியளவிலும் மீண்டும் 2–3 நாள் கழித்து வந்து படம் வரைந்து விசாரித்தார்கள். 2–3 நாள் கழித்து என்பது 04.09.2024 அல்லது 05.09.2024 ம் தேதியாக இருக்கலாம் என்றால் ஆம்.

4. 4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.